Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

# ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

“கற்பவை கற்றுக் கற்றாங் கொழுக”

புத்தகம் 2 } சுன்னாகம்: வெகுதானிய௵ மாசி௴ ௨௨௳ (5-3-39) { இல. 20

## ஜே. எஸ். ஸி.

(J. S. C.)

இவ்வருடம் ஆங்கில J. S. C. பரீக்ஷையில் பெருந்தொகையான பிள்ளைகள் சித்தியடைந்திருக்கின்றனர். வருடா வருடம் சித்தியடையாதிருந்த பிள்ளைகள் யாவரும் இம்முறை சித்தியடைந்திருப்பார்கள் என்பதிற் சந்தேகமில்லை. 'பள்ளிக்கூடங்களில் ஒன்றாவது நல்ல பெறுபேறுகளைப் பெறாது விடவில்லை. பெருந்தொகையான பிள்ளைகள் சித்தியடைந்ததற்குத் தலைமையாசிரியர்கள் வித்தியாகர்த்தருக்கு அனுப்பிய அறிக்கைகளே காரணமாயிருந்தன. வித்தியாபகுதியினர் சித்தியிற் குறைந்த பிள்ளைகளைத் தலைமையாசிரியர்களுக்கறிவிக்க, தலைமையாசிரியர்கள் அப் பிள்ளைகள் சித்தியடையத் தகுந்தவர்கள் என்று அறிவித்தனர். வித்தியாகர்த்தர் யாது செய்வார்? பலமுறை பல பிள்ளைகளைச் சித்தியடையாமற் செய்த வித்தியாபகுதியார் தலைமையாசிரியர்களது அறிக்கைகளை ஏற்க வேண்டியவராயினர். தலைமையாசிரியர்களது அறிக்கையின்பேரில் பிள்ளைகளைச் சித்தியடையச் செய்வது சிறந்த முறையாவென்பது ஆராயத்தக்கது. தலைமையாசிரியர்கள் தங்கள் தங்கள் பள்ளிக்கூடங்களின் கல்விநிலைக்கேற்றபடி பிள்ளைகளைச் சிபார்சு செய்வார்கள். பள்ளிக்கூடங்கள் ஒவ்வொன்றும் கல்வி நிலையில் மாறுபட்டிருக்கும். ஒரு பள்ளிக்கூடத்தில் முதலாம் பையனாகவிருப்பவன், இன்னொன்றில் நடுத்தரமானவனாக விருக்கவேண்டியிருக்கும். ஆகையால் இம்முறை இலங்கை முழுவதிலும் J S. C. வகுப்புக்கு ஒரே தரத்தைக் கொண்டுவரமாட்டாது. J. S. C. பரீக்ஷை இலங்கை முழுவதற்கும் ஒரு பொதுப் பரீக்ஷையாயிருப்பது மாத்திரமன்றி, ஒரே தராதரமுள்ளதாயுமிருக்க வேண்டியது அவசியமாகும். வித்தியாபகுதியார் வருடாவருடம் ஒரு குறித்த வீதப் பிள்ளைகளைச் சித்திபெறச் செய்யவேண்டும். குறித்த ஒரு வருடத்தில் எக்காரணத்தினாலோ பிள்ளைகளின் சித்தி குறித்த வீதத்திற் குறைவடையுமானால் அந்த வீதத்தைப் பெறுதற்குரிய புள்ளிகளை எல்லாப் பிள்ளைகளுக்கும் கூட்டவேண்டும். சித்தியடைந்தவர்கள் குறித்த வீதத்திற்கு அதிகப்படுவார்களானால் எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒரு தொகைப் புள்ளிகளைக் குறைத்துக் குறித்த வீதத்திற்குக் கொண்டுவரவேண்டும். சென்னை வித்தியாபகுதியார் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வோர் சராசரி ஏற்படுத்தியிருக்கின்றனர். இம்முறை மிகவும் பொருத்தமானது. வித்தியாபகுதியார் இம்முறையின் சிறப்புக்களை ஆராய்ந்து கைக்கொள்ள முன் வருவார்களாக.

ஆங்கில பரீக்ஷையிற் கையாளப்படும் முறைகள், தமிழ்ப் பரீக்ஷைகளில் ஏன் கையாளப்படுவதில்லை என்பது தமிழாசிரியர்களது கோரிக்கை. தமிழ் ஆங்கிலம் என்ற பேதம் பாராட்டாது இரண்டு பரீக்ஷைகளையும் ஒரே விதமாக நடத்தவேண்டியது வித்தியாபகுதியாரது கடமையாகும்.

மாலை வளர்த்தென்னை வளர்த்திறைவர் பன்னெறியாய், பாலை வனத்தில்விட்ட பாவமென்னே பைங்கிளியே.

# பொது அறிவு இல. 4

(சுன்னுகம்)

1. ஸ்ரீமான் கத்தோலிக்க சமயத்தவராற் பரிசுத்தமாக எண்ணப்படும் இரண்டு இடங்களின் பெயரெழுதுக.
2. பஞ்சகௌவியம் எவை?
3. இலங்கைக்குள்ளே ஒரு இடத்துக்குத் தபாற் கந்தோர் மூலமாக அனுப்பப்படவேண்டிய பொருட்பொதி (பார்சல்) எத்தனை இறாத்தலுக்குமேலிருக்கக் கூடாது?
4. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருபவர்களுக்கு ஏன் பால் குத்தப்படுகிறது?
5. மத்தியமாகாணத்திலுள்ள ஒரு துறைமுகத்தின் பெயர் எழுது.
6. உண்கலமாக உபயோகிக்கக்கூடிய நான்கு இலை வகை எழுது.
7. பின் வரும் விளம்பரங்கள் எவ்வெவ்விடங்களில் ஒட்டப்பட்டிருக்கும்?
   A. இன்றைக்குக் கடனில்லை.
   B. வீடு வாடகைக்கு விடப்படும்.
   C. உத்தரவின்றி உட்பிரவேசிக்கப்படாது.
   D. வண்டியை நிறுத்தச் சங்கிலியை இழு.
8. சாதாரண கோழிமுட்டை ஒன்றின் நிறை என்ன இருக்கும்?
9. மேல் மாகாணத்தின் தலைநகர் காலியாயின் ஆம் என்றும் கொழும்பாயின் இல்லை என்றும் எழுதுக.
10. ஒன்று தொடக்கம் ஒன்பது ஈறுக உள்ள எண்களை ஒரு இலக்கம் திரும்ப வராதபடி எந்தப் பக்கமாகக் கூட்டினும் 15 விடை வரக்கூடியதாக நிரைப்படுத்துக.

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

11. இலங்கையிலே நெருப்புக் குச்சி செய்ய எடுக்கும் மரத்திற்குப் பெயரென்ன?
12. கீறிட்ட இடத்துக்குப் பின்வரும் சொற்களிலே பொருத்தமானதைத் தெரிந்தெழுதுக.
    மழையில்—— பிடித்துச் செல்வது நல்லது.
    (செருப்பு——கம்பளி——குடை——தடி)
13. உமக்குக் கிட்ட உள்ள சந்தையில் இம்மாசத்தில் அதிகமாகக் காணப்படும் தாவரப் பொருட்கள் மூன்று எழுதுக.
14. சூரியனைக் குறிக்கும் வேறு மூன்று சொற்கள் எழுதுக.
15. ஒளவையார் செய்த நூல்கள் எல்லாம் எவை யென்று எழுதுக.
16. முதலிலிருந்து வாசித்தாலும் கடைசியிலிருந்து வாசித்தாலும் ஒரே மாதிரியாக உள்ள இரண்டு சொற்களெழுதுக.
17. இப்பொழுது யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சுப்பிறீங் கோட்டு வழக்குகளை விளங்கும் நீதி அரசருக்குப் பெயரென்ன?
18. இப்போதிருக்கும் வித்தியாகர்த்தர் பெயரென்ன?
19. இராமாயணம்—திருக்குறள்—நளவெண்பா இவற்றின் நூலாசிரியர் யார்?
20. விவாக காலத்தில் தம்பதிகளுக்குக் காட்டப்படும் நட்சத்திரம் எது? ஏன் காட்டப்படுகிறது?

# கமலிக்கு மூத்தக்காள்

"வே. தீ."

மூத்த பிள்ளை மோடாம். 'கோபால'ரும் தன் மூத்த பிள்ளைக்குப் படிப்புப் பூச்சியமெனக் கண்டு அவள் படிப்பை நிறுத்திவிட்டார். இளையவள் 'கமலி', வகுப்பில் முதற்பிள்ளை. கோபாலர் கமலியையே நன்றாகப் படிப்பித்தார்.

மாணிக்கத்திற்குத் தான் அடுப்படி நாச்சியாராக இருக்கிறதென்றும், தங்கை கமலி படிக்கிறதென்றும் மிகவும் பொறாமை. அவள் நல்ல 'கவுண்' போட்டுக் கொண்டால் அன்றைக்குக் கமலிபாடு அதோ பாடுதான். வீடு மீன்கடையாகும்படி ஏசிக்கொண்டிருப்பாள்.

பாடசாலையால் வந்தது வரமுன் கமலிக்கு ஓயாத வேலை. வயதான பிள்ளையென்றும் பாராமல் அடித்தும் விடுவாள். கோபாலர் மாணிக்கம் செய்யும் நிர்ப்பந்தங்களைக் கண்டித்துப் பேசினாலும் அது பயனற்றதாய் விடும்.

வீட்டைச் சுத்திசெய் யென்பாள்—சுத்தி
செய்கின்ற போதினிற் பல்லை நெருடி
கறியைச் சமையென்று சொல்லி—கமலி
கன்னத் திலேயிரண் டறையு மறைவாள்.

என்று, மாணிக்கத்தின் கொடுமைகளைப் பாட்டு ரூபமாகவே எழுதிவிடலாம். இக்கொடுமைகளாற் கமலியும் நோயாளியாகிவிட்டாள்.— மாணிக்கம், கமலிக்கு மூத்தவளாய்ப் பிறந்ததும் நல்ல பொருத்தம் — மூதேவியிலும் கூடியபடியான அருளையே புரிவாள்.

ஒருநாள் இரவு பன்னிரண்டு மணியிருக்கும். கமலிக்கு மூச்சுவிட முடியாது நெஞ்சை அடைத்துவிட்டது. தழுதழுத்த குரலில் மெதுவாகத் தகப்பனைக் கூப்பிட்டாள். அந்த வயோதிபர் என் செய்வார்.

மாணிக்கம்! மாணிக்கம்! என்று எழுப்பினர் கோபாலர். "சீ, கிழட்டுமுண்டம்; சும்மாயிரேன்" என்று இறுகிவிட்டு மறுபக்கம் புரண்டு கும்பகர்ணப் படலத்தை வாசிக்கத் தொடங்கிவிட்டாள் மாணிக்கம்.

என்ன செய்வாள் கமலி. வெந்நீர் வைத்துக் கொடுக்க மனுஷரில்லை. புரண்டு புரண்டு கத்திக்கொண்டே கிடக்கிறாள். அந்த நடுயாமத்தில் அந்தக் கிழவனைத் தவிர கமலிக்கு வேறு யார் உதவி; பாவம்.

மெய்பில் நோய்மாற்றவும்தம் மெத்தவுண்டேம் அண்ணல்தந்த, மையல்நோய் நீர்க்கமருந்தும்உண்டோ பைங்கிளியே.

# யமனே வா!

இராமன் மிகவும் நல்லவன். பள்ளிக்கூடத்திலே உபாத்தியாயருக்கு இவனிலேதான் பிடிப்பு. பரீட்சைகளில் முதலாவதாகச் சித்தியடைவான். இராமனுக்கு வயது பன்னிரண்டு ஆனதும் அவன் படிப்புக்கு முற்றுப்புள்ளி போட நேர்ந்தது. அவன் தந்தையார் அந்த ஆண்டிலேதான் இறந்துவிட்டார். பாவம்! இவ்வளவு கெட்டிக்காரப் பிள்ளைக்குத் தந்தை ஏனென்று போனும் கடவுள் இப்படிச் செய்துவிட்டார்.

அவன் தாயார் ஓர் அப்பிராணி. மற்றப் பெண்களைப் போல் அள்ளலள்ப்புக்குப் போகமாட்டாள். தானுண்டு, தன் பிள்ளையுண்டு.

அவர்களுடைய சீவியம் மிகக் கஷ்டமாகவே நடந்தது. இராமனும் வளர்ந்துவிட்டான். எவ்வளவுகாலமென்றுதான் கஷ்டப்படுவது.

இராமன் அந்த ஊரின் புறத்தேயுள்ள விறகுகளையெல்லாம் முறித்துக்கொண்டு வருவான். அவற்றைத் தாயார் விற்று வந்தாள்.

இராமன் விறகு வெட்டும்போதெல்லாம் கனவு கண்டுகொண்டேயிருப்பான்: இந்தக் காட்டுக்குள்ளிருந்து ஒரு தேவகன்னிகை வந்து "இராமா! உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டால், தான் விழுந்து வணங்கி "தாயே! என் தாயையும் என்னையும் உன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோ" என்று கேட்கவேண்டுமென்று நினைப்பான்.

ஒருநாள் ஓர் ஆற்றுக்கு மேலே வளர்ந்து சென்ற ஓர் மரக்கிளையிலேறி விறகு வெட்டினன். அதிலிருந்துகொண்டே ஒரு பகற் கனவு கண்டான்: "ஆற்றுக்குள்ளே தவறித் தன் கோடரி விழவேண்டும். உடனே ஆற்றுத் தெய்வம் வந்து, "இது உன் கோடரியா?" என்று கேட்கவேண்டும். தான் பொய்சொல்லாமல் மரத்திலிருந்தபடியே "ஆம் சுவாமி!" என்று சொல்லவேண்டும். உடனே அத்தெய்வம் நீருள் மூழ்கி, "இந்தா இந்தப் பொற்கோடரியையுங் கொண்டுபோ" என்று சொல்ல வேண்டும். தான் உடனே விறகுகட்டை எறிந்துவிட்டுத் தாயிடம் பறந்து போகவேண்டும்" என்றெல்லாம் நினைத்துக்கொண்டேயிருக்கையிற் பிடிதவறிக் கோடரியுந் தானுமாக ஆற்றுள் விழுந்துவிட்டான். பாவம்! விழுந்தவன் ஒருவாறு தத்தளித்துக் கரையேறிவிட்டான். ஆனாற் கோடரி ஆற்றுக்குள்ளேதான். ஆற்றுத்தெய்வம் வந்தபாடில்லை. வந்தாலும் பொற்கோடரியை அவன் இப்போ விரும்பவில்லை. பாதியொடிந்த தன் இரும்புக் கோடரியையேனும் வந்து எடுத்துத்தரவேண்டுமென்று கேட்டான். அத்தெய்வம் வரவேயில்லை. தன்னுயிரையே ஆற்றிடம் பறிகொடுத்தவன் போல வழிநடந்தான். நெடுந்தூரம் நடந்து வந்துவிட்டான். இப்பொழுது கோடரியினெண்ணம் போய்த் தாயின் எண்ணம் வந்தது. தன் பிள்ளைவரும் வழிமேல் விழிவைத்து நிற்பாளல்லவா? பாவம்!

இராமன் கையினல் விறகுகளை ஒடிக்கத் தொடங்கினன். அவன் கைகள் அலுத்துப்போயின. கால்களோ முட்களாற் புண்பட்டன. விறகுகளையெல்லாம் ஒன்றாகக் கட்டிவிட்டு, அதிலேயே ஓவியம் போல் நின்றுவிட்டான். தான்பட்ட கஷ்டங்களை ஒவ்வொன்றாக இராமன் நினைத்தான். அவனுக்குச் சீவியத்தில் வெறுப்புண்டாய்விட்டது. உடனே அவன் "ஆ! இந்தப் பாழ்பட்ட யமன் வந்து என் உயிரைக் கொண்டுபோக மாட்டானே, அடா யமனே!" என்று கூவினன். அந்த வழியாகப் போய்க்கொண்டிருந்த யமன், "இதோ வந்துவிட்டேன்." என்று இராமனுக்குக் காட்சி கொடுத்தான். இராமனுயிரைக் காணேம். அது காட்டுக்குள் ஓடி ஒழித்துவிட்டது. அவன் உடலமெல்லாம் வியர்த்தது. இப்போ இராமனுக்கு எதை இழந்தாலும் உயிரை இழக்க விருப்பமில்லை. இந்த நேரத்திற் தைரியத்தை இழக்கக் கூடாதென்று இராமன் நினைத்தான். அவன் உடனே சமாளித்துக்கொண்டு, "ஓ அண்ணை யமனே! வந்துவிட்டாயா ரொம்ப நல்ல மனுஷன். இந்த விறகு கட்டை ஒருகால் என் தலையிற் தூக்கிவைத்து விட்டுப் போகிறாயா?" என்று கெஞ்சினன். யமன் தானகவே விறகுகட்டைத் தூக்கி இராமன் தலையில் வைத்துவிட்டுப் போய்விட்டான்.

பகற் கனவுகாணும் இராமனுக்கு இதுவும் ஒரு கனவு போலத்தானிருந்தது. என்றாலும் தன் கண்களுக்கு முன்னே நின்ற பொல்லாத யமனை அவனல் மறக்க முடியுமா? தன்னுயிர் தன்னிடமில்லையென்றே அவன் பின்னும் முன்னும் பாராமலே தாயிடம் பறந்து போய்விட்டான். "அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பசாசல்லவா?" யமன் நிற்கிறனே என்று பார்க்கக்கூட அவனுக்கு நேரமில்லை.

இராமன் தாய் அவனை வாரி அணைத்தாள். இராமன் அழுதுகொண்டே, "அம்மா, என் கோடரியை ஆறு பறித்துவிட்டது. போதாதென்று யமன் என்னுயிரையும் பறித்துக்கொண்டு போய்விட்டான்" என்றான். அவன் தாயார் ஆச்சரியப்பட்டாள். இராமன் நடந்தவற்றை ஆதியோடந்தம் தன் தாய்க்குக் கூறினன். தாய் மகனைத் தேற்றினள். அப்போதுதான் தன்னுயிரை யமன் கொண்டுபோகவில்லை என்ற நம்பிக்கை இராமனுக்கு வந்தது. நீங்கள் யமனைக் கூப்பிட்டுப் பாருங்கள், யமன் வருகிறானே பார்க்கலாம்!

சி. அரசரத்தினம் (180)
உடுவில் தெற்குச் சைவவித்தியாசாலை

---

**ஈழகேசரி கல்வி அனுபந்தம்**
தனிப்பிரதி விலை சதம்—3
25 பிரதிகள் விலை சதம்—50
தபாற் செலவு வேறு
ஆண்டுச்சந்தா ரூபா 2.
முற்பணமின்றி அனுப்பப்படமாட்டாது

---

மேவுபஞ்ச வண்ணமுற்றாய் விண்சிறையால் அல்லலுற்றாய், பாவிபஞ்ச வண்ணம் பகர்ந்துவா பைங்கிளியே.

# கல்வி - 38

[ தமிழாசிரியர், திரு. கா. இளையதம்பி அவர்கள். ]

இக்காலத்திலே தொழில் அல்லது முயற்சியை நோக்கும் பரீட்சைகளில் நேர்முகப் பரீட்சையு மொன்று. அது விவேக ஆராய்ச்சியெனவும்படும். இப் பரீட்சையில் வேண்டப்படுவது பொது அறிவாம். "பொது அறிவு எல்லாச் சிறப்புந் தரும்" என்று மேலோர் கூறுப. இதுபற்றியே பரீட்சார்த்திகளின் பொது அறிவு ஆராயப்படுகின்றது. சின்னாளின் முன்னரோராசிரிய கலாசாலையார் புதிதாக மாணக்கரைச் சேர்க்கும் பரீட்சை விபரத்திலே மற்றைய பாடங்களுக்கு 100 அல்லது 50 புள்ளிகளும், நேர்முகப் பரீட்சை யொன்றுக்கு மாத்திரம் 400 புள்ளிகளுமென வெளிப்படுத்தியிருந்ததையுங் கண்டேம். இதனாற் பொது அறிவின் சிறப்பு இத்தகையதென யார்க்கும் புலப்படுமே. மணியகாரர்மாராகப் பயிற்சி பெறுவார்க்குரிய பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சைக்கு 200 புள்ளி கொடுக்கப்பட்டதாக வாசித்தோம்.

"பொது அறிவு எல்லாச் சிறப்புந் தரு" மென்பதிற், சிறப்பு என்பது யாது? அதுதான் உடல் நலத்தையும், மன நலத்தையும், உடை நலத்தையும், ஒழுக்கத்தையும், காரிய நிர்வாகத்தையுந் தெரித்து இவன் கற்றறிவாளனெனக் காட்டும். உடல்நலம் போசனபானாதிகளால் விளங்குமெனினும், மனநலமில்வழி யது பயன்படாதாம். மன நலமே யுடலையடக்கி யாள்வதென்க. மனப்பயிற்சிக்குக் கல்வி இன்றியமையாததெனினுந் தெய்வபயமில்வழியதுவும் பயன்படாதாம். சமயக் கல்வியாலும், தெய்வ வழிபாட்டாலும் மனம் பயிற்றப்பட்டாலன்றிக் கல்வியாற் பயனென்னை? தெய்வ பயமற்ற கல்வியினாலேயே இக்காலத்து மனுஷன் மிருக சுபாவமுடையவனானான். உலகிலே பல்வகை நிஷ்டூரங்களும், நிர்ப்பந்தங்களுந் தலையெடுத்ததின் காரணத்தை விசாரிக்க. அறநெறி யழிந்ததும், மறநெறி தலையெடுத்ததும் தேவதாபக்தியற்ற கல்வியினால் லபித்ததென்க. மனப்பயிற்சிக்குப் பொறுப்பாளரான உபாத்தியாயர்கள் இதனை யூன்றிச் சிந்திக்க. மனப்பயிற்சியிலும் உடற்பயிற்சி மிக்கதென்னுங் கொள்கையுடையாரான மேலைத் தேயத்தவரின் வீணாரவாரங்களைக் கனவிலுங் கொள்ளற்க. மனநல மடைந்தவரான வெம்முன்னோர் உடல் நலத்தைக் கைவிட்டு வாழ்ந்தாரென்று கிஞ்சித்துங் கருதற்க. வீரத் தாயரையும் அவரருந் புதல்வரையும் அவர் வாழ்க்கையையும் நோக்குக.

உடைநலமென்பது பட்டென்றும், பகட்டென்று மெண்ணற்க. அஃது உடைச்சுத்தமென்றே கருதும். கந்தையானாலும் கசக்கிக் கட்டென்பர். தேகமும், மனமும், உடையுஞ் சுத்தமாயிருத்தலையே நலமென்று சொல்லாற் கருதினேம். அகத்தினழகு முகத்திற் றெரியுமென்றும், அகந் தூய்மை வாய்மையாலும், புறம் (உடல்) தூய்மை நீராலுமமையுமென்றும் சொல்லுப. வாய்மை யென்பது தெய்வக் கொள்கையாலும், வஞ்சனை பொறாமை லோபமாதியனவற்ற நிலையாலும் மனத்துக்குக் கிடைத்த "சுக" மென்ப. பாழடைந்த மனத்துக்குப் பக்தியேது! அகந் தூய்மையடையாதவிடத்து உடல்நலங் கைகூடாதென்றும், உடல்நலங் கைகூடாவிடின் உடைநலம் பேணுதல் சாத்தியமன்றென்றுந் தெளிக.

பெரியோர் கண்டு மகிழும்படி நடத்தலையே ஒழுக்கமென்ப. நாம் முற்கூறிய யாவும் ஒழுக்கத்தைப் பிறப்பிப்பனவாம். ஒழுக்கமே மனித வாழ்க்கையைச் சிறப்பிக்கு மாபரணமென்க. உயர்குடிப் பிறப்பும், உயர்ந்த வாழ்க்கையும் ஒழுக்கமுடையார்க்கே சாலுமென்று பெரியோர் கூறுப.

காரிய நிர்வாகமென்பது சீவியத்தின் எல்லாத் துறைகளிலுஞ் செல்லுமாற்றலென்ப. சாதாரணமான குடும்ப வாழ்க்கையையும் முட்டின்றி நடாத்துந் திறனற்ற வெத்தனை வித்தியாபண்டிதர்களை நாம் காண்கின்றோம்! எந்தக் கருமத்தையுந் தொடுத்து முடிக்கு மாற்றலற்றார்க்குக் கல்வியறிவாலாம் பயனுண்டோ?

பொது அறிவென்பதியாது? முக்கால் மைல் சுற்றளவான குளத்தைச் சுற்றி வரும்படி உலாப்போன வொருவன் அரைமைல் தூரஞ் சென்றபின், நேரம்போய்விட்டதென்று சொல்லிக்கொண்டு போன வழியே திரும்பி வந்தானாகில், அவனுடைய பொது அறிவைப் பற்றி நாமென்ன சொல்லலாம்? சமையலாளோடிவிட்டதனாற் பட்டினி கிடப்பவனைப்பற்றிப் பிள்ளைகளென்ன நினைக்கிறீர்கள்? சொற்ற வற்றியலான் மற்றைய பிறவும் தெற்றெனவுணருமாற்றலற்ற மாணக்கன் வினாப் பத்திரத்தைப் பார்த்து மயங்குதல் குற்றமோ? காலை 9 மணிக்குப் புறப்படும் புகைரதத்திற் செல்லவேண்டியவன் காலை 9 மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டானாகில் அவனறிவிருந்தபடியென்னை? வாழ்க்கையி னெல்லா நிலையிலும்

வாய்திறவா வண்ணமெனை வைத்தாண்டார்க் கென்துபரை, நீதிறவாச் சொல்லின் நிசமாங்காண் பைங்கிளியே.

# கை விட்டுவிடு பாப்பா *

### சன்னல்

வளியை உள்விடும்
ஒளியும் வந்திடும் — சிறைபோல்
வெளியிற் செல்லொணுது
அளைக்கோல் இரும்புகள்
அடைத்து ஆவியைக்
குடைந்து காவும்அச்
சன்னலைத் தொட்டதுநீ போதுமே
சினந்துஇகழ்ந்து பே பே பே
எனநகைத்தே விடு கை கை. (க)

### கதவு

தெருநாய் வரவிடும்
விருந்துக்கு ஒடுங்கிடும் — பீடுயர்
பெரியோர் தலையினைச்
சரித்து மோதியே
யாழ்ப்பண் தெரிப்பபோல்
தாழ்ப்பாள் தருக்கும்அக்
கதவினைத் தொட்டதுநீ போதுமே
சினந்துஇகழ்ந்து பே பே பே
எனநகைத்தே விடு கை கை. (உ)

### ஊஞ்சல்

ஈச்சில் மகிழ்ந்திடும்
வீச்சே நாடிடும் — சாந்த
மூச்சுப் பேச்சிலே
ஈச்சுக் கீச்செனக்
கள்ளிற் களித்தபோல்
துள்ளிச் சுளிக்கும்அவ்
ஊஞ்சலைத் தொட்டதுநீ போதுமே
சினந்துஇகழ்ந்து பே பே பே
எனநகைத்தே விடு கை கை. (ங)

* வீட்டில் புழங்கும் மரச்சாமான்களை இகழ்ந்து, மகவினைவிறகப் பழக தாய் ஊக்குதல்.

### மேஜை

நஞ்சும் அருந்துவர்
செஞ்சொல் மறந்தனர், — வன்கண்
நஞ்சைக் கொட்டிடும்
வஞ்சக் கோலினைத்
தாங்கித் திரிபுகள்
விங்கப் பரத்தும்அம்
மேஜையைத் தொட்டதுநீ போதுமே
சினந்துஇகழ்ந்து பே பே பே
எனநகைத்தே விடு கை கை. (ச)

### குருச்சி

கலந்து தரையிலே
குலவார் அருமொடு — தாமே
தலைவர், காலுடைப்
புலையர் பிறரென
இகழ்ந்து போந்திட
அகத்தே எந்தும் அக்
குருச்சியைத் தொட்டதுநீ போதுமே
சினந்துஇகழ்ந்து பே பே பே
எனநகைத்தே விடு கை கை. (ரு)

### கட்டில்

சாம்பிச் சார்விடம்
சோம்பல் சோர்விடம் — தூயன
ஓம்பும் நனவிலே
தேம்பல் தருவதைத்
தினையே வேட்டதால்
கனவில் ஊட்டும்அக்
கட்டிலைத் தொட்டதுநீ போதுமே
சினந்துஇகழ்ந்து பே பே பே
எனநகைத்தே விடு கை கை. (சு)

### தூண்

விழற்புற் கூரையால்
மழையைத் தடுப்பினும் — அறைக்குஅறை
சுழித்துத் திரிபவர்
குழைகள் அதிர்ந்துக
இடித்துச், சிறுகுடில்
இடத்தைக் குறுக்கும்அத்
தூணினைத் தொட்டதுநீ போதுமே
சினந்துஇகழ்ந்து பே பே பே
எனநகைத்தே விடு கை கை. (எ)

### பொது

மலர்கள் மணந்தன
குலைகள் குலுங்கின — மரங்களில்
கிலைத்த புட்குரல்
தொலைய வீழ்த்தியே,
கொடுங்கைக் கம்மியர்
தொடுத்த இம்மரப்
பிணமெலாம் தொட்டதுன்னைப் போதுமே,
நடுங்கிவீழ்க பேப்பேப்பேச்
சொடக்கிநீ போப்பாப்பா. —சொக்கன்.

மனிதன் முட்டின்றிக் காலந்தள்ளுதற்கு வேண்டும் பொது அறிவு மிகவுஞ் சிலாகிக்கப்பட வேண்டியதே. கொடுக்கப்பட்ட சற்சதுரத்தினிருமடங்கு பெரிய பின்னெரு சற்சதுரம் வரைக என்பதையும், எம் தேயத்திலே சூரிய நிலை சித்திரையிற்போலவே ஆவணியிலிருப்பவும் ஆவணி மாதத்திலே நாமேன் அதிக அனலை யனுபவிப்பதில்லை யென்பதை விளக்குக என்பதையும், புத்தளம் நீர்கொழும்புப் புறங்களிலிருப்பவர்கள் பேச்சிலும் பழக்கவழக்கங்களிலுஞ் சிங்களரின் வேறுபட்டவர்களாயிருந்தாலும், அவர்களைச் சிங்களராகக் கொள்வதற்கு நியாயமென்ன வென்பதையும் பார்த்து மலைக்கும் மாணுக்கனின் பொது அறிவு எப்படிப் பட்டதென்று ஆராய்க.

## கண்ணம்மாள்.

சாயங்காலத்தை யார் வர்ணிக்க வல்லார்! எத்தனையோ கவிகள் இத் திவ்ய சமயத்தின் வனப்பைக் கவி ரூபமாக மாற்ற முயன்றிருக்கின்றனர். இரவி மேற்குக் கடலுள் இன்றைய வேலைமுடிந்தது என்று சந்தோஷத்துடன் புகவும், சந்திரன் கண்ணை விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கிற வேளையில் சர்வவியாபியான காற்று நண்பண் சந்திரன் வந்து விட்டானென்ற ஆனந்தத்தோடு செடி கொடிகளினூடே புகுந்து அதிக இரைச்சலில்லாமல் மெதுவாய் அடித்துக் கொண்டிருக்கும் வேளையில் குதூகலம் அடையாதார் யார்? அங்கங்கே மகாலட்சுமி வரும் வேளையென்று சிறுசிறு விளக்குகள் மின்னிக்கொண்டிருக்கின்றன. பட்சிஜாலங்கள் தங்கள் கூடுகளில் பேசிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருக்கின்றன.

அவ்வேளையில் நான் உலாவப் போவது வழக்கம். உலாவி வரும்பொழுது சாலையின் ஓரத்திலுள்ள கல்லொன்றில் கண்ணம்மாள் விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள். இதைக் கண்டதும் எனக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. அனைவரும் தமது துக்கத்தை மறைத்திருக்கும் இவ்வேளையில் இப்பெண் அழுவானேன்? தாயே அழக் காரணமென்ன? சொல்லுதி; என்னால் நீக்க முடியுமானால் நீக்கி விடுகிறேன் என்றேன். கண்ணம்மாள் மௌனஞ் சாதித்தாள். மறுபடியும் வீடு செல்ல வழி தெரியவில்லையா? நான் அழைத்துச் செல்லுகின்றேன் என்றேன். அப்பெண் அழுகையை நிறுத்தி வீடு செல்ல வழி தெரியாமல் இல்லை; அதோ இருக்கும் வீடு தான் என்னுடைய வீடு. என் கஷ்டங்களை நினைத்து அழுகிறேன் என்றாள். நான் பொழுது போகிறது, வாருங்கள் வீட்டிற்குச் செல்லுவோம் என்றேன். அப்பெண் தன்னை ஒருவாறு தேற்றிக்கொண்டு எழுந்து வந்தாள்.

வீட்டிற்குப் போனதும் நிலங்கள் கிலமாய்க் கிடந்தது. தூண்கள் ஆடிக்கொண்டிருந்தன. சுவர்கள் இடிந்து விழும் சமையம். சிறிது தூரத்தில் ஒரு பாயில் உடல் மெலிந்த மனிதர் ஒருவர் படுத்திருந்தார். அவருக்குப் பக்கத்தில் ஒரு விளக்கு மழுங்கலாக எரிந்து கொண்டிருந்தது. கண்ணம்மாள் விளக்கைத் தூண்டினாள். தூண்டவே அவர் கண்ணை விழித்துப்பார்த்து வைத்தியர் எங்கே? வரவில்லையோ என்று ஈனசுரத்தோடு வினவினார். வைத்தியர் வரவில்லை. மருந்து கொடுத்திருக்கிறார் என்றாள். சிறிது நேரத்தால் ஆடிக்கொண்டிருந்த சுவரும் அந்த உடல் மெலிந்த மனுஷருக்கு மேலே விழுந்து விட்டது. விழுந்ததும் அவருடைய ஆத்மா சாந்தி அடைந்தது. இதை அறிந்ததும் கண்ணம்மாள் பட்ட துயரத்தைக் கேட்கவும் வேண்டுமோ? பின்பு கண்ணம்மாள் சிறிது நாட்கள் வரை எங்களுடன் இருந்து வந்தாள். திடீரென்று அவளுக்கு வயிற்றுவலி உண்டாயது. நாங்கள் வைத்தியரை அழைத்து வருமுன் அவளும் இறந்து விட்டாள்.

கு. ராதாரத்தினம் (195)
ஞானோதய வித்தியாசாலை, அளவெட்டி.

## தந்தைதாய் பேண்

தாயானவள் பத்து மாசங்களாகச் சுமந்து பெற்று ஈ எறும்பு மொய்யாமலும், காற்று வெய்யில் படாமலும், கண்ணை இமை காப்பது போலக் காத்து வருகின்றாள். தந்தையானவர் உண்ண உணவும் உடுக்க உடையும் தந்து கெட்ட சினேகம் செய்யவாவது, ஓடி ஒழித்துக் கெட்டவனாய்த் திரியவாவது, பொய் பேசவாவது தன்னிச்சையாய் விடாது அடக்கி வளர்த்து வருகின்றார். அன்றியும் நாம் விரும்பிய விரும்பிய பதார்த்தங்களையும் விளையாட்டுச் சாமான்களையும் எவ்வித கஷ்டப்பட்டும் வாங்கித்தருகின்றார். பின்பு கல்வியறிவில்லாத மூடனாயிருக்க விடாது ஐந்து வயதிலே நல்லாசிரியரை நாடி கல்வி பயிற்றுவித்து எல்லாராலும் மதிக்கக் கூடியவனாக ஆக்குவிக்கின்றார். நோய் வந்த காலத்து அதற்கேற்ற வைத்தியரை நாடி மருந்து தந்து காப்பாற்றுகிறார்.

நமது கல்வி அறிவு ஆண்மை பொறுமை உண்மை ஒழுக்கம் இவற்றில் மேன்மையுடையவனாயிருக்கும்போது வித்தையில் அகத்தியனோ, அறிவில் ஆதிசேஷனோ, பொறுமையில் தருமனோ, வாய்மையில் அரிச்சந்திரனோ என்றும், இவனைப் பெறுவதற்கு இவன் தந்தை என்ன தவத்தைச் செய்தானோ என்றும் பிறரால் புகழப்பட்டு நல்ல கீர்த்தியைப் பிதாவுக்கு சம்பாதித்துக் கொடுக்க வேண்டும்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்"

என்னும் திருவள்ளுவர் கூற்றை மறவாது நம்மைப் பெற்ற போதிலும் அதி மகிழ்ச்சியடையக்கூடிய தாய் கலைவல்லவனாயும் நற்குண நற்செய்கையாளனாயும் விளங்க வேண்டும். "அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" என்பதை ஆராயாது பிற்காலத்து தாய் தந்தையரை வாயில் வந்தபடி ஏசியும் அடித்துத் துன்புறுத்தும் பாவிகள் கொடிய நரகத்தில் வீழ்ந்து துன்பத்தை அனுபவிப்பார்கள்.

"அன்னை மொழியைப் பொன்னெனப் போற்று"

என்றும்

"தந்தைசொல் மிக்க மந்திர மில்லை"

என்றும் கூறுவதினால் அவர்கள் சொல்லைத் தட்டாது சொல்லிய வேலைகளை உடனே செய்துவரவேண்டும். நாம் பெரியவர்களாயகாலத்து அவருக்கு வேண்டிய உணவுகளையும் உடைகளையும் குறைவில்லாது கொடுத்து அன்புடனே அவர்களுக்கு ஏவலானவை புரிந்து வர வேண்டும். தாய் தந்தையர் பசியால் வருந்தி நோயால் துன்பம் அனுபவிக்கும் காலத்தில் நாம் பலவகையான தருமங்களைச் செய்வதிலும் "தந்தைதாய் பேண்" என்றபடி அவர்களுக்கு எவ்வகையான குறைகளும் ஏற்படாது காப்பாற்றவேண்டும்.

கோ. ஐயாத்துரை
VIம் வகுப்பு,
இருபிட்டி அ. மி. பாடசாலை.

# ஆமையின் தந்திரம்

ஒரு வனத்திலே ஒரு நீர் யானையும், யானையும் எப்பொழுதும் சந்தோஷமாக இருந்தே ஆகாரம் அருந்திக் கொண்டு வந்தன. அவைகள் தாங்கள் மிகவும் பலசாலிகளாக இருப்பதைப்பற்றிக் கர்வங் கொண்டிருந்தன.

ஒரு நாள் அவை இரண்டும் கரும்புத் தோட்டத்துட் புகுந்து உணவருந்தும் சமயம் ஒரு ஆமை அவைகள் சமீபத்திற் சென்று, "நீங்கள் பெரியவர்களாயிருந்தாலும் அற்பமாகிய என்னை உங்களில் யாராவது நீரிலிருந்து ஒரு கயிற்றினால் கட்டி வெளியில் இழுக்க முடியுமா?" என்று கேட்டது. தன்னை வெளியே இழுத்தால் அதற்கு இருநூறுபவுண் கொடுப்பதாக யானையிடம் கூறிற்று.

ஆமை சிறிய பிராணியானதால் ஜயித்துவிடலாம் என யானை நினைத்து, "நான் உன்னை இழுக்காவிட்டால் உனக்கு முந்நூறு பவுண் கொடுக்கிறேன்" என்றது.

'இச்செய்தி காட்டுத் தீ போல அவ்வனத்திலே பரவ அவ் வனத்திலுள்ள நரி, குரங்கு, முயல், கரடி முதலாம் பிராணிகள் பந்தயம் நடைபெறும் தடாகக் கரையைக் கிட்டின. தவளையும் இச்செய்தியைப் பார்ப்பதற்காகத் தடாகத்திலிருந்து வெளியேறினது. ஆமை ஒரு கெட்டியான கயிற்றை எடுத்து ஒரு முனையை யானையின் துதிக்கையிலும், மறு முனையைத் தன் காலிலும் கட்டிக்கொண்டு தண்ணீருக்குட் போயிற்று. உள்ளே போய் ஒரு பெரிய பாறையில் கயிற்றைக் கட்டிவிட்டுத் தயாராக இருப்பதாகச் சைகை காட்டிற்று.

யானை உடனே தன்னாலானமட்டும் இழுத்தது. கயிறு அறுந்ததே தவிர ஆமை வெளிவரவில்லை.

கயிறு அறுந்ததும் ஆமை பாறையில் கட்டியிருந்த கயிற்றைத் தனது காலிற் கட்டிக்கொண்டு வெளியே வந்து தான் ஜெயித்து விட்டதாக ஜெயகோஷம் செய்தது. யானை ஆமைதான் ஜெயித்தது என்று நினைத்து தான் வாக்குப்பண்ணிய முன்னூறு பவுணையும் கொடுத்து விட்டுச்சென்றது.

சில நாட்களால் ஆமை நீர்யானையிடம் போய் பந்தயம் வைத்துக் கொண்டது. ஆனால் நீர்யானை "எல்லாம் சரிதான். நான் நீர்ப்பிராணிதானே. ஆகையால் நான் தண்ணீரில் இருப்பேன். நீ கரையிலே இருக்கவேண்டும். நான் தண்ணீரிலிருந்து உன்னைத் தண்ணீருக்குள் இழுப்பேன்" என்றது. அதற்கு ஆமை சம்மதித்து கயிற்றின் நுனியை நீர்யானையின் காலில் கட்டிவிட அது நீருட் சென்றது. மறுமுனையை ஆமை கரையிலிருந்த பெரிய ஆலமர வேரிலே கட்டிவிட்டது.

# விகடன் விடும் பகடம் இல. 2

நண்பரொருவர் தனது சிநேகிதனைப் பார்த்து, உமது புதிய மனைவியுடைய சமையல் பாகங்கள் உமக்கு திருப்தியா?

சிநேகிதன்:- அப்படியா! அவள் சென்ற வெள்ளிக்கிழமை தொடக்கம் காணாமல் ஓடிவிட்டாள்.

* * *

ஒரு பிரயாணி புகைரதநிலையக் கூலியாளைப் பார்த்து, புகைரதம் இன்னும் 10 நிமிடத்தாற் புறப்படுமாம். அதற்கிடையில் சீட்டு (ரிக்கற்) வாங்கிக்கொள்ளவும், எனது சாமான்களை ஒழுங்குபடுத்தவும், கடையில் சிற்றுண்டியருந்தவும் நேரம் இருக்குந்தானே?

பு. கூலி:- நீர் சீட்டை வாங்கிக்கொண்டு, சாமான்களை ஒழுங்குபடுத்தும்; நான் சிற்றுண்டியைச் சாப்பிட்டு முடிக்கிறேன்.

* *

ஒரு வயோதிபமாது வருத்தமுற்றிருந்தபோது, வைத்தியரை அழைப்பித்தாள். அவர் ஒரு மருந்தைக் கொடுத்து, "இதைச் சாப்பிடும். பத்துவயது இளமையுள்ளவள்போலாகிவிடுவீர்" என்றார்.

வ. மாது:- அப்படி 10 வயது குறைந்துவிட்டால் எனது பென்சன் பணம் எடுக்கமுடியுமா?

வெளிவந்துவிட்டது!
வெளிவந்துவிட்டது!!

விசாகப்பெருமாளையரவர்கள்
இயற்றிய

**யாப்பிலக்கணம்**

(திருத்தமான பதிப்பு)

**விலை சதம் 35.**

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

நீர்யானை இழுத்து இழுத்துக் களைத்தவுடன் நீரை உறிஞ்சிக் கொண்டு வெளிவர எத்தனித்தது. அது வெளியே வருவதைப் பார்த்தவுடன் ஆமை மரத்திற் கட்டிய கயிற்றை தன் காலிற் கட்டிக்கொண்டு ஓடிவந்து நீர்யானைக்குக் காண்பித்தது. நீர்யானை ஆமைதான் பலசாலி என நினைத்துத் தான் வாக்குப்பண்ணியபடி நானூறு பவுணையும் கொடுத்தது.

யானையும் ஆமையைப் பலசாலி என்று எண்ணித் தங்களுடன் சிநேகிதமாக இருக்கும்படி வேண்டின.

வே. இராசையா
நல்லூர்

# ஈழகேசரி இளைஞர் சங்கம்

## அருமைக் குழந்தைகாள்!

இந்த வாரம், எங்கள் பேரன் பேத்திமார் எல்லோரும் ஒரு குறையைமாத்திரம் வைத்துக்கொண்டு கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். அதாவது, தங்களுடைய தங்களுடைய கட்டுரைகளெல்லாம் ஏன் பிரசுரிக்கப்படவில்லை யென்று! வாராவாரம் எங்களுக்குக் கிடைக்கும் கட்டுரைகளையெல்லாம் பிரசுரித்து வைப்பதென்றால் கல்வியநுபந்தம் மாத்திரமல்ல, 'ஈழகேசரி பதினாறு பக்கங்கள்கூடப் போதாது! இனிக் கட்டுரைகளுக்குள் தெரிந்தெடுப்பதென்றால் மூன்று நாலு கணக்குப்பிள்ளைகளைப் பிரத்தியேகமாக வைத்திருக்கவேண்டும்! தாத்தாதான் தள்ளாத வயதில் இதையெல்லாம் செய்து முடிப்பதென்றால் எவ்வளவு சிரமமாயிருக்குமென்று நீங்களே யோசித்துப் பாருங்கள்!

கட்டுரை கதை எழுதுபவர்களெல்லாம் முக்கியமாக அவதானிக்கவேண்டிய சில நிபந்தனைகளை மறந்துவிடுகிறார்கள். இளைஞர் சங்கத்துக் குழந்தைகளுக்கு மாத்திரந்தான் இவ்விதம் கல்வியனுபந்தத்தில் எழுத உரிமையுண்டு. வேறு பெரியவர்களும் மற்றவர்களும் எழுதிவிட்டு இளைஞர்களைக்கொண்டு அனுப்பப்படும் விஷயங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. புனை பெயர்கள்மாத்திரம் போட்டு அனுப்பப்படும் விஷயங்கள் நிராகரிக்கப்படும். இனி இளைஞர்களாகிய நீங்கள் இன்னவிதமான கட்டுரைகள், கதைகள் எழுதலாமென்ற ஒரு பொது அறிவை வைத்துக்கொண்டே எழுதத் தொடங்கவேண்டும். வெறுங் காதல் சித்திரங்களும், பாடசாலையிலும் தெருவிலும் உண்மையில் நடந்த சம்பவங்களைக்கொண்ட கதைகளும் தாத்தா பிரசுரிக்க ஒத்துக்கொள்ளமாட்டார் என்பதைக் கவனிக்கவும்.

கட்டுரைகள் 'பூல்ஸ்காப்' கடுதாசியில் மையினால் ஒரு பக்கத்தில் மாத்திரம் சுத்தமாக எழுதப்படவேண்டும். இந்த நிபந்தனையைப் பலர் மறந்துவிடுகின்றனர். சிலர் பக்கங்கள் போடாமல் எழுதிக் கடதாசிகளைச் சேர்த்துத் தைக்காமல் அனுப்பிவிடுகின்றனர். இதனால் சிதைவுகள் ஏற்படுகின்றன.

இந்தக் குறைபாடுகளின் காரணமாகவே பல விஷயங்கள் பிரசுரத்துக்கு எடுத்துக்கொள்ளவில்லை. இங்கே என்னிடம கழிக்கப்பட்டுக் கிடக்கும் விஷயங்கள் ஒரு வண்டிக்குக் காணும். இவைகளில் பல பிரசுரத்துக்கு ஏற்றதாயில்லை. ஆகையால் என் குழந்தைகளெல்லாம் கவனிக்கவேண்டியதென்னவென்றால், பிரசுரத்துக்கு விஷயங்கள் மேற்காட்டிய நிபந்தனைகட்குட்பட்டிருக்க வேண்டும். விஷயங்கள், சிறு கதைகள் தெளிவான நடையிலிருக்கவேண்டும். எழுதப்படும் விஷயங்களெல்லாம் பிரசுரிக்கப்படுமென்ற கட்டுப்பாடு கிடையாது.

வருகிற சித்திரைமாதம் நடக்கும் மகாநாட்டில் வெளியிடப்படும் 'கல்விமல'ருக்கு விஷயங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பிரதானமாகச் சிறுவர் கல்வி முன்னேற்றத்துக்கான விஷயங்கள்தான் தேவை. சரித்திரம், சுகாதாரம், கணிதம், பூமிசாஸ்திரம் சம்பந்தமான கட்டுரைகள், சமூக சீர்திருத்தக் கதைகள், விடுகதை வினாக்கள், படங்கள் முதலியன இடம்பெறும்.

ஆகையால் சிறுவர் சிறுமியர்கள் கட்டுரை கதைகள் எழுதுவதில் நான் சொன்ன முறைகளை அனுட்டிப்பார்களென்று நம்புகின்றேன்.

— தாத்தா.

## தாத்தா பதில்

**நா. சிவபாதசுந்தரம்** (?) உமது காசு ரூபா ஒன்றும் பெற்றுக்கொண்டோம். சந்தோஷம். மகாநாட்டில் பங்குபெறுவதைப்பற்றி மிக மகிழ்ச்சி. உமது கட்டுரை பார்வையிடப்பெற்றுப் பிரசுரிக்கப்படும்.

**மா. துகராசா** (199) நான் இந்தவாரக் குறிப்பில் எழுதியிருப்பதை வாசித்துப்பார்க்கவும். ஆனால் முயற்சியைக் கைவிடாது கட்டுரைகள் எழுதிக்கொள்ளவேண்டும். செ. இராசையாவுடன் நட்புக்கொள்ளலாம். விலாசம்: அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி, கோப்பாய்.

**பத்மாவதி** (18) உமது அங்கத்துவம் சென்றவாரம் புதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதே இலக்கத்தை நீர் எப்பொழுதும் வைத்திருக்கலாம். தாத்தாவுக்குப் பேரனும் சரிதான் பேத்தியும் சரிதான். பேச்சுப் போட்டியில் ஆண்கள் மாத்திரம் பெண்களைப் பார்க்கிலும் வன்மை அதிகம் படைத்தவர்களென்று கருதிவிடவேண்டாம். ஒரு வேளை பெண்பாலார்தான் வெற்றிபெற்றுவிட்டால், யார் கண்டார்கள்? இப்படி இருபாலாரையும் பிரித்துப் போட்டிகள் வைப்பது தாத்தாவுக்கு அவ்வளவு உசிதமானதாகத் தோற்றவில்லை. எல்லாரும் பங்குபற்றலாம். தேர்தல் அங்கு பிரசன்னமாயிருக்கும் அறிஞர் கூட்டத்தைச் சேர்ந்தது.

**சே. முருகானந்தன்** (125) எழுத்துப் போட்டிக்கு நியாயமானது அழகான புஸ்தகங்களே. பரிசுத்தொகை கூட்டப்படும் விஷயம் மற்ற மற்ற வருடங்களில் பார்த்துக்கொள்ளலாம். நான் இவ்வாரம் எழுதியிருக்கும் குறிப்பைப் பார்க்கவும்.

**வே. தீ. நடராசா** (196) உமது கதை பிரசுரிக்கப்படுகிறது, கடிதமெழுதும்போது உமது தபால் விலாசம், தேதி முதலியன குறிப்பிட்டெழுதவேண்டுமென்பதை மறந்துவிடவேண்டாம்.

**சி. அரசரெத்தினம்** (180) வியாசங்கள், கதைகள் எல்லாம் எழுத்தாளரின் சங்கதிதான். சித்திரமுகப்பு விஷயம் 1-4-39க்குப் பின்னரே தெரியப்படும்.

### புதிய அங்கத்தவர் (முற்றுட்டர்)

216. ச. நாகராசஐயர்  217. R. கோபாலரத்தினம்.

யாழ்ப்பாணம்–மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய"த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டியி'லுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-௵ மார்ச்சு 5௳ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.